Publication : Theekathir

Region : Chennai

Date : Dec 09, 2010

# ஆரோக்கியமான கல்வியால் மட்டுமே நல்ல சமூகத்தை ஏற்படுத்த முடியும் கல்வியாளர்கள் பேச்சு

சென்னை, டிச 8-

கல்வியில் ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்துவது எப்படி என்பது குறித்த கருத்தரங்கம் சென்னையில் செவ்வாயன்று (டிச 7) நடைபெற்றது.

நாளைய பள்ளி என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் பேசிய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் முன்னேற்றங்களை கல்வியின் வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றார். தரமான கல்வி கிராமங்களுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கல்வித் துறையை ஆரோக்கியமான துறையாக மாற்ற வேண்டும் என்றும் கூறினார்.

எழுத்தாளர் குருசரண் தாஸ் பேசுகையில், இந்தியா பலதுறைகளில் வளர்ச்சி அடைந்துள்ள போதிலும் மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கப்படுகிறதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது என்றார். 21 ஆம் நூற்றாண்டை சமாளிக்கத் தேவையான அறிவு, தொலைத் தொடர்பு, கல்வி, சிந்தனைத் திறன் ஆகியவற்றை மாணவர்களுக்கு வழங்கவேண்டும் என்று ஹார்வர்டு பல்கலைகழக பேராசிரியர் டேவிட் பார்கின்ஸ் குறிப்பிட்டார்.